
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1159

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

55

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# தூக்குமேடை: உடைமை ஆதிக்கத்துக்கு எதிரான புரட்சிக் காவியம்!

முத்தமிழறிஞர் கலைஞரால் எழுதப்பட்டு 1947-ஆம் ஆண்டு, அரங்கேற்றப்பட்ட நாடகம் 'தூக்குமேடை'. இதை நடிகவேள் எம்.ஆர்.ராதா பல முறை மேடையேற்றினார். கலைஞர் இந்நாடகத்தை எழுதியதுடன், அதில் நடிக்கவும் செய்துள்ளார்.

இந்நாடகத்தை எழுதியதற்காகவே 'கலைஞர்' என்கிற பட்டத்தை எம்.ஆர்.ராதா கலைஞருக்கு வழங்கியுள்ளார். அத்தகைய சிறப்பு வாய்ந்த நாடகத்துக்கு கலைஞர் 1982-ஆம் ஆண்டு, திரைக்கதை வசனம் எழுதிட, திரைப்படமாக எடுக்கப்பட்டது. தயாரிப்பு அப்பன் மூவீஸ் நடராஜன். இயக்கம் அமிர்தம். இசை சங்கர் கணேஷ்.

இப்படத்தில், நாயகனாக நடித்தமைக்காக வாகை சந்திரசேகர் மீது அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கோபம் கொண்டு தனது ராமாவரம் தோட்டத்துக்கு வருமாறு சந்திரசேகருக்கு அழைப்பு விடுத்தார் என்பதையும், சந்திரசேகர் போகாமல் தவிர்த்தார் என்பதையும் வாகை சந்திரசேகர் 'சாய் வித் சித்ரா' நேர்காணலில் பதிவு செய்துள்ளார். அந்தளவுக்கு ஆட்சியாளருக்கு ஆத்திரமூட்டிய திரைப்படம்.



இப்படத்தில் சந்திரசேகர் (கந்தன்), மேனகா (பவானி / பார்வதி), உஷா (வேணி), சக்கரவர்த்தி (பாண்டியன்), எஸ்.எஸ்.சந்திரன் (அபிநயசுந்தரம்), செந்தாமரை (கங்காதரன்/ காங்கேயன்), கே.கண்ணன் (தமிழ் பண்டிட்) சாமிக்கண்ணு (முனியன்) எஸ்.ராமாராவ் (பலவேசம் பிள்ளை) நாகேஷ் (வக்கீல்) எனப் பலரும் நடித்துள்ளனர்.

### குடிசைகள் இருப்பது அவமானம்

அபிநயசுந்தரம் (எஸ்.எஸ்.சந்திரன்) மிகப் பெரிய நிலக்கிழார், அறங்காவலர், உள்ளூர் சேர்மன் மற்றும் கல்லூரித் தாளாளர் போன்ற பல்வேறு பொறுப்புகளை வகிக்கிறார். இதனால், பெரிய மனிதராகக் காட்சியளிக்கிறார். ஆனால், மறுபுறம் கொலை, கொள்ளைகளில் ஈடுபடும் கொடுங்கோலராகவும் இருக்கிறார்.

தான் காரில் வலம் வரும் சாலையின் ஓரத்தில் குடிசைகள் இருப்பது அசிங்கமாக உள்ளது என்று, அவற்றைத் தனது அடியாட்கள் மூலம் பிய்த்து எறியச் செய்கிறார். அதை அவரது கல்லூரியில் பயிலும் மாணவன் பாண்டியனும் (சக்கரவர்த்தி) கார் டிரைவர் முனியனின் மகன் கந்தனும் (வாகை சந்திரசேகர்) தடுக்கின்றனர். இதனால், அவர்கள் மீது அபிநயசுந்தரம் கோபம் கொள்கிறார்.

மேலும், தன் மனைவி கமலத்திற்குத் தெரியாமல் ஆசைநாயகி (சி.ஐ.டி. சகுந்தலா) உடன் அபிநயசுந்தரம் உல்லாசமாக இருக்கிறார். ஒரு நாள் ஆசைநாயகி வீட்டில் இருந்து, தமது வீட்டுக்கு வரத் தாமதமாகும் எனத் தன் மனைவியிடம் கூறும்படி, டிரைவர் முனியனிடம் சொல்லியனுப்புகிறார்.


முனியன் கமலத்திடம் எசமான் வரத் தாமதமாகும் எனச் சொல்லிவிட்டு முதலாளியின் படுக்கையறையைச் சுத்தம் செய்ய மாடிக்கு வருகிறான். அங்கு தனது முதலாளி அருந்தும் மதுப்புட்டிகளைப் பார்த்து ஆசைப்பட்டு, மது அருந்தி போதையில் முதலாளியின் கட்டிலிலேயே படுத்து உறங்கி விடுகிறான். கமலம் சாப்பாட்டு மேசையிலே கணவனின் வருகைக்காகக் காத்திருந்து அப்படியே உறங்கிப் போகிறார். ஆனால், வீட்டுக்கு வரும் அபிநய சுந்தரம் தனது படுக்கையில் முனியனைப் பார்த்ததும் கோபம் கொண்டு அடித்து விரட்டுகிறார். தனது மனைவி கமலத்தைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்து, அவள் தற்கொலை செய்து கொண்டதாக ஊரையும் சட்டத்தையும் ஏமாற்றிவிடுகிறார்.



அபிநயசுந்தரத்தின் அடாவடித்தனங்களையும் விவசாயத் தொழிலாளர்கள் மீதான சுரண்டலையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்காக அபிநய சுந்தரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் பாசறையில் கந்தனும் இணைகிறான். அவனுக்குக் 'கதிரவன்' என்ற பெயர் சூட்டப்படுகிறது.

விவசாயிகளை ஒன்றாகத் திரட்டி அபிநயசுந்தரத்தினால் அபகரிக்கப்பட்ட ஆடு, மாடுகள், மோட்டார் பம்ப் செட்டுகள், நெல் மூட்டைகள் ஆகியவற்றை கதிரவன் மீட்டுக் கொடுக்கிறான். இதற்கிடையே கந்தனுக்குப் பதிலாக அவன் அப்பா முனியனை காவல் நிலையம் அழைத்துச் சென்ற நிலையில், போலீஸார் அவன் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்கின்றனர்.

அபிநயசுந்தரத்தின் அக்கிரமத்தை இனி பொறுத்துக்கொள்ள முடியாது என்ற நிலையில் பாசறைத் தலைவர் காங்கேயன், கந்தனையும் பவானியையும் அழைத்துக்கொண்டு அபிநய சுந்தரத்தின் மாளிகைக்குப் போகிறார்.





படங்கள் உதவி: ஞானம்

அடுத்து, அவரிடம் கார் டிரைவராகப் பணி செய்யும் முனியனின் (சாமிக்கண்ணு) மகள் முத்தம்மா காளி கோயிலுக்கு வழிபட வரும்போது கோயில் பிரகாரத்தில் வைத்து, முத்தம்மாவை பாலியல் வன்புணர்வு செய்து கொன்று விடுகிறார்.

தன் தங்கை முத்தம்மாவை, சீரழித்துக் கொலை செய்த அபிநயசுந்தரத்திற்கு உடந்தையாக இருந்த கோயில் பூசாரியை கந்தன் விரட்டிப்பிடிக்க முற்படும்போது கோயில் பூசாரி சூலாயுதத்தில் தவறி விழுந்து இறந்துபோகிறான். கொலைப்பழி கந்தன் மீது விழுகிறது. கந்தனை போலீஸ் துரத்துகிறது. தப்பி வரும்போது பவானி (மேனகா) அவனுக்கு அடைக்கலம் கொடுத்து, தன் தந்தை காங்கேயனிடம் (செந்தாமரை) கந்தனை அழைத்து வருகிறாள்.

> பவானி, தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அபிநயசுந்தரத்தைச் சுட முற்படுகிறாள். அதற்குள் அபிநயசுந்தரத்தின் அடியாள் வீசும் கத்தி பவானியின் வயிற்றில் பாய்கிறது.

அபிநயசுந்தரத்திடம் தன் பெயர் கங்காதரன் என்பதையும் கர்ப்பிணியான தன் மனைவியின் வயிற்றில் அபிநயசுந்தரம் 20 ஆண்டுகளுக்கு முன் காலால் எட்டி உதைத்ததால் அவள் இறந்துவிட்டதையும், அந்தக் கோபத்தில் அபிநயசுந்தரத்தைப் பழிவாங்க அவரது குழந்தை பார்வதியை, தான் கடத்தி வந்து பவானி எனப் பெயரிட்டு வளர்த்து, அபிநயசுந்தரத்திற்கு எதிராகப் போராட வைத்த உண்மைகளையும் கங்காதரன் எடுத்துச் சொல்லி, அபிநயசுந்தரத்திடம் 'நீ திருந்திவிட வேண்டும்' என்று சொல்கிறார்.

ஆனால், அபிநயசுந்தரம் அவர் சொன்னதை நம்ப மறுப்பதுடன் பார்வதி (பவானி) தன் குழந்தை அல்ல, வேறு எவருக்கோ பிறந்த குழந்தை என இழிவாகப் பேசுகிறார். அதனைக் கேட்டு கொதித்தெழும் பவானி, தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அபிநயசுந்தரத்தைச் சுட முற்படுகிறாள். அதற்குள் அபிநயசுந்தரத்தின் அடியாள் வீசும் கத்தி பவானியின் வயிற்றில் பாய்கிறது. பவானி கீழே சரிகிறாள். கந்தன் துப்பாக்கியை எடுத்து அபிநயசுந்தரத்தைச் சுட்டுக் கொல்கிறான்.

இறுதியில் கந்தன் காவலர்களால் கைது செய்யப்படுகிறான். அவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. அவனது உயிர் பிரியும் அதே நேரம் கத்திக்குத்தால் காயம் பட்ட பவானியும் இறக்கிறாள். அத்துடன் படம் முடிவடைகிறது.

...காட்சி விரியும்

## யுத்த தந்திரத்தின் பிழைகள்!

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் நடத்திவரும் தாக்குதல் ஒரு மாதத்துக்கு மேல் நீடித்துவருகிறது. அதன் தாக்கம் உலக அளவில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழலில், ஈரான் அதிபர் பெசஷ்கியான் அமெரிக்க மக்களுக்கு எழுதியுள்ள கடிதம், உலகின் கவனத்தைப் பெற்றுள்ளது. 'அமெரிக்க மக்கள் ஈரான் மீது தவறான பிம்பத்தை விட்டு, உண்மையை உணர வேண்டும்' என வேண்டுகோள் வைத்துள்ளார்.

'ஈரான் – அமெரிக்க உறவு தொடக்கத்தில் பகைமையுடன் இருக்கவில்லை. ஈரானின் வளங்களை தேசியமயமாக்குவதைத் தடுக்க, அமெரிக்கா மேற்கொண்ட தலையீடுதான் இரு நாடுகளுக்குமான பகையை ஏற்படுத்தியது. ஆனால், ஈரான் தடைகளைத் தாண்டி, பல துறைகளில் அது முன்னேறியுள்ளது. கல்வியறிவு கணிசமாக உயர்ந்துள்ளது, நவீன தொழில்நுட்பங்கள், சுகாதாரச் சேவைகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தி இருக்கிறோம். இவை அனைத்தும் ஈரானைப் பற்றி உருவாக்கப்பட்ட கட்டுக்கதைகளுக்கு அப்பாற்பட்ட உண்மையாகும்.

அதே நேரத்தில், தடைகள், போர், தாக்குதல்கள் ஏற்படுத்திய மனிதநேயமற்ற விளைவுகள், ஈரானிய மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எண்ணற்ற உயிர்கள், வீடுகள், நகரங்கள் மற்றும் எதிர்காலத்தை இந்தப் போர் அழித்துள்ளது. இந்தப் போரால் உண்மையில் அமெரிக்க மக்களுக்கு என்ன நன்மை? ஈரானிடமிருந்து உண்மையான அச்சுறுத்தல் ஏதும் இருந்ததா?

அப்பாவிக் குழந்தைகள் கொல்லப்படுவது, புற்றுநோய் சிகிச்சை மருந்து உற்பத்தி நிலையங்கள் அழிக்கப்படுவது, மின் உற்பத்தி மற்றும் தொழில்துறைக் கட்டமைப்புகள்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நேரடியாக ஈரானிய மக்களையே குறிவைக்கின்றன. இவை போர்க்குற்றங்கள் மட்டுமின்றி, எல்லைகளைத் தாண்டிய விளைவுகளையும் உருவாக்குகின்றன. அவை உலகத்தை நிலைகுலையச் செய்கின்றன; மனித மற்றும் பொருளாதாரச் செலவுகளை உயர்த்துகின்றன. இது வலிமையின் வெளிப்பாடு அல்ல; அமெரிக்காவின் யுத்த தந்திரத்தில் நேர்ந்த பிழைகள். சரியான தீர்வை எட்டுவதற்குத் திறனற்ற தன்மையின் வெளிப்பாடு.

இந்த உண்மையைப் பார்க்குமாறு அமெரிக்க மக்களை நான் அழைக்கிறேன்' என அமெரிக்க மக்களுக்கு அவர் எழுதியுள்ள நீண்ட கடிதம் உலக மக்களுக்கானதும் ஆகும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரின் திருக்கரங்களால் பரிசு!



கோபாலகிருஷ்ணன்

2008-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய 'பாவேந்தர் பாரதிதாசன் பாடல் ஒப்பித்தல்' இறுதிப் போட்டியில், திருச்சியில் இருந்து முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவனாகக் கலந்துகொண்டு வெற்றிபெற்றேன். அதற்கான பரிசளிப்பு, திருச்சி கலைஞர் அறிவாலயம் திறப்பு விழாவில், அன்றைய முதலமைச்சர், 'செம்மொழி நாயகர்' கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் அளிக்கப்பட்டது. எந்தத் தலைவரின் குரலை ஒலிநாடாவில் கேட்டு, தமிழ் படிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டேனோ, அந்தத் தலைவரின் திருக்கரங்களால் பரிசு பெற்றது என் வாழ்நாளில் மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்த நன்னாள்.

**– முனைவர் க.கோ (எ) கோபாலகிருஷ்ணன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**குளித்தலை கிழக்கு ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வழிகாட்டி... நமது பணி நிற்காது!

நம் உரு

1967-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர், கழகத்தின் நான்காவது சிறப்பு மாநாட்டில், பேரறிஞர் அண்ணாவின் சிறப்புரை, கழகத்தினரை எழுச்சி கொள்ள வைத்தது. "ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும், அமைச்சரவை ஏற்க வேண்டும் என்பதுதான் கழகத்தின் இறுதி முடிவு என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அது மட்டுமே இலட்சியமல்ல; தமிழ் மொழி காக்க வேண்டும், தமிழ் இனத்தை, பண்பாட்டைக் காத்தாக வேண்டும். உலக வரலாற்றில் நாங்கள் தமிழர்கள் என்று தலைநிமிர்ந்து கூறக்கூடிய நிலை வரை நமது பணி உள்ளது" என்று முழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900